# 5வது சிறுவழக்குகள் நீதிமன்றம்
## ( மோட்டார் வாகன விபத்து வழக்குகள் தீர்ப்பாயம், சென்னை)

## MCOP No.345/2023

| | |
|---|---|
| சாட்சியின் வரிசை எண் | மசா1 |
| பெயர் | ஹரிஷ் |
| க/த.பெயர் | ராஜா |
| வயது | 34 |
| விலாசம் | வேளச்சேரி, சென்னை |
| தொழில் | ... |

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969 ன் பிரிவு 6ன் படி சத்திய பிராமணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 29.06.2026 ல் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். வாகன விபத்தில் என் தந்தை இறப்பிற்கு இழப்பீடு கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். இதில் என்னை எனது தரப்பில் முதல் சாட்சியாக விசாரித்து கொண்டு எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதான். அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். இதில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்துக்கொள்ள வேண்டுகிறேன். 1ம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல் மசாஆ1, 2ம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல் மசாஆ2, வாரிசு சான்றிதழ் மசாஆ3, இறந்தவரின் மனுதாரரின் ஆதார் அட்டை நகல் மசாஆ4, குடும்ப அட்டை நகல் மசாஆ5, இறப்பு சான்றிதழ் மசாஆ6, முதல் தகவல் அறிக்கை

மசாஆ7, சம்பள சான்றிதழ் மசாஆ8, 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் நகல் மசாஆ9, வாகன பதிவு சான்று நகல் மசாஆ10, அபராதம் செலுத்திய ரசீது மசாஆ11, மோட்டார் வாகன ஆய்வாகள்அறிக்கை மசாஆ12, இறப்பு அறிக்கை மசாஆ13, பிரேத பரிசோதனை அறிக்கை மசாஆ14.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2ம் எதிர்மனுதாரர் ஆஜர் இல்லாத காரணத்தினால் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

**X**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது,

**5 வது நீதிபதி**
**சென்னை**